Ruby Miss. → Paid



"ஆய கலைகளில் ஆற்றல் பெருக
'கண்மணி' கரம் தருவாள் !"

விலை 20/-

# கண்மணி

இதழ் 2 மாசி 2009 பக்கம் : 10



கண்மணி

## 'கண்மணியின்' கண்மணிகளுக்கு....!



**அன்பான மாணவ நெஞ்சங்களே!**

மாணவப் பருவம் மகத்தானது. இப்பருவத்தில் விதைக்கப்படும் எண்ணங்களே வாழ்க்கையை வடிவமைக்கின்றன. இளமையில் உகந்த வழிகாட்டல் கிடைப்பின் எல்லோரும் சாதனையாளர் ஆகலாம். உயர்ந்த இலட்சியத்தை நோக்கி வாழ்க்கையை செலுத்தலாம். ஆனால் நல்ல வழிகாட்டல் கிடைக்க வேண்டுமே. அந்த நோக்கில் கருவாகி உருவாகி வந்தவள் தான் கண்மணி. இந்த மாதப் பத்திரிகையை வெளியிடும் எண்ணம் 2002 ஆம் ஆண்டளவில் எனக்குள் உருவாகியது. எனினும் 2009 ஆம் ஆண்டிலே தான் செயலுருப் பெற்றது. இப் பத்திரிகைக்கு "கண்மணி" எனும் பெயரை 2002 ஆம் ஆண்டிலேயே வழங்கி ஊக்குவித்த கவிஞரும் எனது ஆசானுமாகிய கல்வயல் வே.குமாரசாமி அவர்களுக்கு எனது நன்றிகளை உரித்தாக்குகிறேன். உங்கள் ஆதரவில் கண்மணி வளருவாள்.

இரா.ஜெயக்குமார்,
பிரதம ஆசிரியர், 'கண்மணி'

**ஆசிரியர்**
இரா.ஜெயக்குமார்
(B.A, Dip in Education)
சிவன் வீதி, உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்.

**ஆலோசகர் குழு**
**பா.தனபாலன்,**
(M.Phil in Education)
உப பீடாதிபதி,
யாழ் தேசிய கல்வியியற் கல்லூரி

**ம.பார்வதிநாதசிவம்,**
புலவர்

சிவத்தமிழ் வித்தகர்
**சிவமகாலிங்கம்**
(B.A, Dip in Edu., SLEAS)

**கவிமணி க. ஆனந்தராஜா**
அதிபர்,
யா/உரும்பிராய் சந்திரோதய
வித்தியாலயம்

**கணினி வடிவமைப்பு**
சி.ரங்காதரன்

## மூலிகைச் செடி வளர்ப்போம்!

நாம் இப்போது வீடு தோறும் தலைவலி மாத்திரைகள் முதல் கொண்டு கால்வலி மாத்திரைகள் வரை வாங்கி வைத்துள்ளோம். காரணம் அவை அவசரத்திற்கு உதவும் என்ற நம்பிக்கையே. இத்தோடு வீட்டில் அவசரத்திற்கு உதவ ஓர் மூலிகைச் செடியையாவது வளர்ப்போம் என்ற எண்ணம் எம் மனதில் உதிக்குமாயின் அது ஓர் நன்மை தரும் கைங்கரியமாகும்.இடவசதியற்றவர்கள் கூட சாடிகளில் மூலிகைச் செடிகளை வளர்த்திடலாம்.மூலிகைச் செடி வளர்ப்பானது பல வழிகளிலும் உங்களிற்குக் கைகொடுக்கும். துளசி, முடக்கொத்தான், கற்பூரவள்ளி, தூதுவளை என்று சின்னஞ்சிறு மூலிகைத் தோட்டம் அமைத்தலே போதுமானது. செடிகள் வளரவளர உங்கள் மனதும் இதமாக இருக்கும். அத்துடன் செடிகள் இருக்கும் பகுதி குளிர்ச்சியானதும் இரம்மியமானதுமான சூழலையும் உருவாக்கிக் கொள்ளும்.

மூலிகைச் செடிகள் அவசரத்திற்கு முதலுதவி மருந்தாகக் கூட இருக்கும். அது மட்டுமன்றி பல்வேறு நோய்களிற்கு நிவாரணியாகவும், வருமுன் காப்போனாகவும் தொழிற்படும். மூலிகைச் செடிகள் உங்கள் வீட்டில் இருப்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்களுடன் ஓர் மருத்துவர் இருப்பது போன்ற உணர்வை ஏற்படுத்தும்.

வீடு தோறும் மூலிகைச் செடிவளர்ப்பதன் மூலம் நாம் ஒரு சிறிதளவே ஏனும் மூலிகைக் காற்றைச் சுவாசிக்க முடியும். எந்த வகையிலாவது மூலிகைச் செடிவளர்ப்பானது எமது ஆரோக்கியத்திற்கு அரணாகவே அமைகிறது.

எல்லாவற்றிற்கும் மேலாக வீடு தோறும் மூலிகைச் செடிகளை வளர்ப்பதன் மூலம் அழிந்து வரும் மூலிகைகளைப் பாதுகாப்பதற்கான ஓர் ஏற்பாடாகவும் கூட அமையும்.

**ப.அருந்தவம்**
**ஆசிரிய ஆலோசகர் [விவசாயம்]**
**வலிகாமம் கல்வி வலையம்.**



# அறத்தினைப் பின்பற்றும் உங்களை அகிலம் போற்றும்!

P.திருக்குமார் (B.A),
ஆசிரியர்,
யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி

அறம் என்பது நீதி நூல்களில் "விதித்தன செய்தலும் விலக்கியன ஒழிதலும்" என விளக்கப்பட்டுள்ளது. அறமானது ஒழுக்கம், வழக்கு, தண்டம் என மூவகைப்படும்.

"மெய்ம்மை பொறையுடைமை மேன்மை தவமடக்கம்
செம்மை ஒன்றின்மை துறவுடைமை - நன்மை
திறம்பா விரதத் தரிந்த லோடின்ன
அறம் பத்தும் ஆன்ற குணம்" எனும் அறநெறிச்சாரச் செய்யுள் பத்து அறங்களையும் கடைப்பிடித்து வாழும் வாழ்க்கையையே ஒழுக்க நெறி சார்ந்த வாழ்க்கை என்கிறது.

ஒழுக்கப்பெறுமானங்கள் தற்காலத்தில் குறைந்து கொண்டு வருவதற்கு காரணம் இளம் சந்ததியினருக்கு ஒழுக்கப் பெறுமானங்கள் பற்றிக் தெரியாதிருப்பதாகும். அது தவிர பலர் தங்களுக்கென்றே வெவ்வேறு ஒழுக்கப் பெறுமானங்களை உருவாக்கிக் கொண்டிருக் கின்றார்கள். உலகில் இன்று தோன்றியுள்ள போட்டிகள், பூசல்கள், இன அழிவுகள், இயற்கை அழிவுகள், இன்னல்கள் இவற்றுக்கு மத்தியிலும் மனிதனால் வாழ முடிவதற்கு காரணம் ஒழுக்கம் இன்றும் பின்பற்றப்பட்டு வருவதேயாகும்.

இயற்கை ஓர் ஒழுங்கில், நியதியில் இயங்குவதை மனித ஒழுக்கமே தீர்மானிக்கும். அதாவது மனிதன் ஒழுக்கம் தவறும் போது மழை, புயல் போன்ற ஆபத்துக்கள் ஏற்படும் என அஞ்சியமையினால் வேத காலத்திலிருந்தே ஒழுக்கத்தை பின்பற்றுவதில் அக்கறை செலுத்தி வந்தான் எனலாம். "அஞ்சாமை அகத்தூய்மை ஞான யோகங்களில் ஊன்றல், ஈகை, புலனடக்கம், வேள்வி, கல்வியறிவு, தவம், நேர்மை, இன்னாசெய்யாமை, வாய்மை, சினமின்மை, துறவு, பிறர் தீமை கருதாமை, உயிர்தயை, பிறன்பொருள் விழையாமை, மென்மை, நாணம், மன உறுதி, துணிவு, பொறுமை, உறுதி, தூய்மை, வஞ்சகமின்மை, செருக்கின்மை எல்லாம் தெய்வ இயற்கைக்கு பிறந்தவனுக்கு இருக்கும் இயல்பு என பகவத் கீதை குறிப்பிடுகின்றது.

"நல்லொழுக்கம் மில்லாரிடஞ் சேர்ந்த நல்லோர்க்கு
நல்லொழுக்கமில்லாச் சொல் நண்ணுமே"
என்கிறது நீதி வெண்பா.

மேலும் ஒழுக்கற்ற செய்கையை உடைய கீழோரிடத்தில் மனமும், சொல்லும், செயலும் வேறு வேறாய் இருக்கும். இதற்கு மாறாகப் பெரியோரிடத்தில் இவையனைத்தும் ஒன்றாகவே இருக்கும். இதுவே இறைவனை அடைவதற்குரிய வழியாகவும் இருக்கும்.

அற வாழ்க்கையில் வள்ளுவர் கூறுகின்ற அன்புடைமை, விருந்தோம்பல், இனியவை கூறல், செய்ந்நன்றி அறிதல், நடுவு நிலைமை, அடக்க முடைமை, ஒழுக்கமுடைமை, பொறுமையுடைமை, அழுக்காறாமை, வெஃகாமை, புறங்கூறாமை, பயனில் சொல்லாமை, ஈகை, அருளுடமை, கள்ளாமை, வாய்மை, இன்னா செய்யாமை, கூடா ஒழுக்கம் என்பவற்றில் குறிப்பிட்ட விடயங்கள் சமுதாய விருத்தியை மேம்படுத்தும் பண்புகளாகும்.

சமுதாய ஒழுக்கத்திற்கு அடிப்படையானது சமய, ஒழுக்கமாகும். இதனால் இந்துசமய ஒழுக்கக்கோட்பாடுகளையும் அதனைப் பின்பற்றி எழுந்த ஏனைய சமய ஒழுக்கங்களையும் நோக்கும் போது பஞ்சமா பாதகங்களை தவிர்த்தல், விரதம், தவம், தீர்த்தம் என்பவற்றை பின்பற்றல், மனதை ஒருநிலைப்படுத்தல் என்பன சமூக கட்டுப்பாட்டிலும் சமூக ஒழுக்கத்திலும் பெரும் பங்கு வகிக்கும் என்பதனால் வீட்டிலும் பாடசாலையிலும் பின்பற்றப்படும் ஒழுக்கச் செயற்பாடுகள் சமூக ஒழுக்கத்தை வளர்த்து சமூக சமநிலையை பேணுவதற்குரிய அடிப்படையை ஏற்படுத்துகின்றன. அன்பு, கருணை, சகிப்பு, நேர்மை, பொறுப்புணர்வு, புரிந்துணர்வு மனவுறுதி, சேவை மனப்பான்மை, சகோதரத்துவம் எனும் உயர்பண்புகளை மாணவர்கள் வாழ்க்கையில் பின்பற்றுவதன் மூலம் ஒழுக்க சீலர்களாக வாழ முடியம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இந்த தேசத்தின் ஆத்மா அதன் சமயத்திலுள்ளது" எனும் விவேகானந்தரின் கூற்று சமுதாய ஒழுக்கத்திற்கு தெய்வ நம்பிக்கையே அடிப்படை என்பதை தெளிவுபடுத்துகின்றது. எனவே மாணவர்கள் விரத அனுட்டாமை, ஆலயத்தொண்டு, மரபு பேணுதல், மாதா பிதா குரு தெய்வம் என்பவர்களைப் போற்றி வழிபடுதல் என்பவற்றின் மூலம், உயர் பண்புகளை வளர்த்துக் கொள்ள முடியும். நாயன்மார்களும் பெரியார்களும் வாழ்ந்து காட்டிய வழியில் வாழ்வதன் மூலம் பல தசாப்தங்களாக எம்மிடையே காணப்படாத உதாரண புருஷர்கள் ஆக இன்று இளஞ்சிறார்கள் மாற முடியும். இதனால் எதிர்கால சமுதாயம் இந்து சமயக் கோட்பாடுகள் கூறி நிற்கும் ஒழுக்கக் கருத்துக்களை வாழ்க்கையில் பின்பற்றி மனிதருள் மாணிக்கங்களாக தோற்றம் பெறுதல் வேண்டும்.

"அறத்தினூ உங்காக்கமும் இல்லை அதனை
மறத்தலின் ஊங்கில்லைக் கேடு"

சிறுகதை

# மேடை

அவன் பாடசாலைக்குச் செல்லும் போது புளியமரத்தை நிமிர்ந்து பார்த்தான். கைக்கெட்டும் தூரத்திலுள்ள காய்களையெல்லாம் யாரோ பறித்துவிட்டார்கள். உச்சியில் நிறையக் காய்கள் தொங்கின. பாடசாலை விட்டுத் திரும்பி வரும் போது அவற்றுக்குக் கல்லெறிந்து பார்க்க வேண்டும்.

ஒரு முறை அப்பு அவனது தங்கையைப் பிடித்து விட்டான். அவன் ஓடிப்போய் ஒளித்திருந்து பார்த்தபோது அப்பு அவனை விசாரித்துக்கொண்டிருந்தான். அதன் பிறகு அந்தப் புளிய மரத்தை நெருங்கும் போது எல்லாப் புதர்களையும் கூர்ந்து கவனிப்பான். எதிலிருந்தும் அவன் வெளிவரக்கூடும்.

பாடசாலை வளவினுள் நுழைந்ததும் ஒருவித பயம் சூழ்ந்து கொண்டது. அவனைத் தவிர எல்லோரும் சிரித்துக் கதைத்தபடி அலைந்தனர். அவன் தனது மேசையில் புத்தகப்பையை வைத்தான். மாணவர்களின் விளையாட்டை வேடிக்கை பார்த்துக்கொண்ருந்தான்.

வினோ அக்கா நீளம் பாய்ந்து கொண்டிருந்தாள். அவன் அங்கே போய் நின்று கொண்டான். ஒருவன் அவனது முழங்காலின் பின்புறம் தனது முழங்காலால் இடித்து மடியச் செய்தான்.

"ஏன்ரா அவனுக்கு இடிச்சனி?" என்று வினோ அக்கா உறுக்கினாள். இடித்தவன் திகைத்துவிட்டான். பின்னர் அங்கிருந்து மெல்ல நழுவினான்.

"நீ இஞ்சாலை வந்து நில்லடா" என்று வினோ அக்கா சொன்னாள். மணி அடித்துவிட்டது.

எல்லோரும் தத்தம் வகுப்புக்கு முன்னால் நிரையில் நின்று கொண்டனர். அவன் கடைசியிலிருந்து மூன்றாவதாக நின்று கொண்டான். அவனது காது நுனியில் யாரோ சுண்டினார்கள். திரும்பினான். அவனுக்குப் பின்னால் நின்றவன் செயற்கையான முகபாவத்துடன் அவனைக் கவனிக்காதிருந்தான். அவனது வலக்காதின் நுனி மீண்டும் சிவந்தது. நிரை நகர ஆரம்பித்தது.

மண்டபத்தில் தேவாரம் சொல்ல ஆரம்பித்த போது அவன் மெல்ல வாயசைத்துக்கொண்டான். தேவாரம் முடியும் கணத்தை எல்லோரும் எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். உடனே அமர்ந்துவிட வேண்டும். இல்லையேல் அவனுக்கு உட்கார இடம் இல்லாது போய்விடும் அல்லது இரண்டு தொடைகளுக்கு நடுவில் அவனது தொடை நசிந்து போய்விடும். உட்கார்ந்த பிறகு ஒருவன் இன்னொருவனின் காற்சட்டையின் பின்புறத்தில் வால் கட்டிக்கொண்டிருந்தான்.

"உங்காற்றாய் உனக்கு வால் கட்டிறான்" அவ்வொருவன் தனது வாலைப் பிடித்தெறிந்தான். நீர் வேண்டப் போறாய்" என்றான். வால் கட்டியன் பல்லை இளித்துக்கொண்டிருந்தான். மேடையில் பரிசுகள் கொடுத்துக்கொண்டிருந்தார்கள். அவனது பெயரை அறிவித்த போது முதலில் சந்தேகமாக இருந்தது. இரண்டாம் முறை கூப்பிட்டவுடன் வேகமாக எழுந்து மேடைக்குப் போனான். அவர் பரிசை நீட்டிவிட்டுப் பின்னர் கையை இழுத்துக்கொண்டார். பின்னால் திரும்பி மற்றவரைப் பார்த்துப் புன்னகைத்தார். அவன் வெறுங்கையுடன் திரும்பி வந்தான்.

அன்றிரவு பக்கத்து வீட்டார் கூடியிருக்கையில் அவனது மூத்த சகோதரனின் 'நக்கல்' தொடங்கியது. அவனால் முகத்தை எப்படி வைத்துக்கொள்வதென்றே தெரியவில்லை. அவனது பெயரோடு ஆயிரம் போர்கள் இருப்பார்கள். அவன் அதை நன்றாக அறிவான். ஆனால் அம்மேடையில் அவனது பெயரைக் கூப்பிட்டபோது எழுந்த திடீர் உத்வேகத்தால் எழுந்து சென்றான். வெறுங்கையுடன் மேடையிலிருந்து திரும்பி வந்த கணம் மறக்க முடியாதது. ஐந்நூறு பார்வைகள் அவனைத்துளைத்தன. அந்தக் கணத்தை அவனது மூத்த சகோதரன் நீடித்தான்.

அவன் எங்காவது ஒளிக்க வேண்டும். எண்ணங்கள் பயமுறுத்தும். எண்ணங்களை எவ்வளவு தவிர்க்க முயல்கிறானோ அவ்வளவு அவை அவனைச் சூழ்ந்து கொள்ளும். அவனைத் துரத்தும். எண்ணங்களிலிருந்து தப்பி ஓட முடியவில்லை. அவன் தன்னை எதிலாவது ஈடுபடுத்திக்கொள்ள வேண்டும். அப்போது சிறு விடுதலை இல்லை. அப்போதும் எண்ணங்கள் அவனறியாமல் அவனுள் நுழைந்து கொண்டிருக்கும். பொருட்படுத்தத் தேவையில்லாத சொற்றொடர்களை உமிழ்ந்து கொண்டே இருக்கும். பெரும்பாலும் பித்றல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**த.செல்வக்குமார், குப்பிளான்**

மேடையில் பேசிக் கொண்டிப்பதாக கற்பனை செய்வான். அப்போது மட்டும் அவனால் ஆளுமைப் படுத்தப்பட்ட கருத்துக்கள் தெறித்து விழும். யாரும் பொருட்படுத்தாத கோணத்தில் சொல்லிக் கொண்டிருப்பதாக ஒரு பாவனை வந்துவிடும்.உண்மையில் மேடையேறியதும் அவன் கைகால்கள் எல்லாம் பதறத் தொடங்கிவிடும். அவ்வியலாமையை மறைக்க கற்பனைகள் துணை செய்யும்.

அவன் தனது வயது ஞாபகமில்லாத சிறுவயதில் முதன் முதலாக மேடையேறிப் பேசிய ஞாபகம் வந்தது. சொற்கள் தொண்டைக்குள்ளேயே சிக்கிக் கொண்டன. ஏதோ சமய சம்பந்தமான தலைப்பு என்று ஞாபகம். பேச்சை முழுவதுமாக முடிக்குமுன்னரே நடுவர்கள் அவனை அனுப்பிவிட்டார்கள். அதன் பிறகு யார் முகத்தையும் பார்க்க விரும்பவில்லை. அவனது நம்பிக்கையும் போய்விட்டது. அதில் பங்குபற்றிய எல்லோருக்கும் பரிசு இருந்தது.

வினொ அக்காவிற்கு 2 ஆம் பரிசு கிடைத்தது. அது குறித்து அவனுக்கும் கவலைதான். அவன் தன்னுடைய பெயரையும் அறிவிப்பார்கள் என எதிர்பார்க்கவில்லை. அனால் ஆறுதல் பரிசில் அவனது பெயரையும் அறிவித்தார்கள். 2ம் முறையாக அவனது பெயரை அறிவித்தபோது தன்னைத்தான் அழைக்கிறார்கள் என்பதில் எவ்வித சந்தேகமும் எழவில்லை. ஆட்களோடு ஆட்களாக இருந்துவிட்டான். அவர்கள் அவன் வரவில்லை என முடிவு செய்து அடுத்த பெயரை அறிவித்தார்கள்.

# சிறுவர் உரிமைகளைக் காப்போம்

அளவு கடந்து நிற்கும் விஞ்ஞானம் ஆகிய வானை அழகுபடுத்த விண் மீனாக பிறக்கும் ஒவ்வொரு குழந்தைக்கும் ஓர் எதிர்காலம் உண்டு. பச்சிளம் பருவத்தில் பள்ளிக்கு செல்லும் கால்கள் இன்று தடுமாறி வேலைக்கு செல்கின்றது. துஷ்பிரயோகம் என்னும் சொல்லை வைத்து உலகில் உள்ள செல்வந்தர்கள் சிறுவர்களை அடிமைப்படுத்தி வேலைகளை செய்வித்து அவர்களுடைய சம உரிமையைப் பறிக்கின்றனர். சூரிய குடும்பத்தில் இருந்த புளூட்டோவை கோள் இல்லை என்று சொல்லி தவிர்த்து விட்டனர் விஞ்ஞானிகள். அதே போல வசந்தம் என்னும் காற்றில் இருந்து சிறுவர்களை ஒரு ஒளியாண்டு தொலை தூரத்தில் விலக்கி வைக்கின்றனர். பாடசாலைக்கதவு திறந்திருக்கும். ஆனால் சிறைச்சாலைக்கதவு எப்போதும் முடியிருக்கும். அது போல சிறுவர்களின் வாழ்வில் வெளிச்சக் கதவும் மூடியிருக்கச் செய்கின்றனர். துஷ்பிரயோகத்தில் முதன்மை பிடிப்பவை வறுமையும், அறியாமையும் ஆகும். வறுமை என்னும் சொல்லினால் உலகம் தடம்புரண்டு கொண்டிருக்கின்றது. பெற்றோர்களின் அறியாமை கூட இதற்கொரு காரணம் ஆகும். இவற்றில் இருந்து நாம் விடுபட வேண்டும் என்றால் கட்டாயக் கல்வி, சமஉரிமை ஆகியவற்றைப் பெற வேண்டும். இவற்றில் இருந்து விடுபட்டு அளவு கடந்து நிற்கும் வானை சூரியனிலும் பல மடங்கான விண் மீனாக உருவாகி அழியாமல் பிரகாசிப்போம்.

**பா.மஞ்சுதன்,**
**தரம் - 8B,**
**யா/யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.**

# எப்படி மதிப்பிடுவது


செல்வன் ஒருவன் எதிரில் பிச்சைக்காரன் ஒருவன் வந்தான்; பிச்சைக்காரனுடைய கந்தல் ஆடைகளைப் பார்த்து அருவருப்பு அடைந்தான் அவன். பிச்சைக்காரனைக் கேவலப்படுத்த நினைத்த அவன், "பிச்சைக்காரனே! தெருநாய்கள் உங்களைக் கண்டால் ஏன் குரைத்து 'விரட்டுகின்றன? எங்களை அவை ஒன்றும் செய்வது இல்லையே" என்று கேட்டான். அதற்கு அவன், "ஐயா! இந்த நாய்கள் சில மனிதர்களைப் போன்றவை. ஒருவர் அணிந்திருக்கும் ஆடையைக் கொண்டே அவரை மதிப்பிடும். அதனால் தான் எங்களை விரட்டுகின்றன" என்று சூடாகப் பதில் தந்தான்.

நன்றி

**சி.தர்சினி தரம் - 8,**
**யா/கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# பாட்டு



ஓடும் எறும்பே நில்! நில்!
ஓடி விளையாடச் சொல்! சொல்!
ஊரும் எறும்பே நில! நில்!
உழைத்து வாழச் சொல்! சொல்!
சின்ன எறும்பே நில்! நில்!
சேர்ந்து படிக்கச் சொல்! சொல்!
புற்று எறும்பே நில்! நில்!
பூக்கள் மலரச் சொல்! சொல்!
கடிக்கும் எறும்பே நில்! நில்!
சுறுசுறுப்பை நமக்குச் சொல்! சொல்!

**லஜதரன்**
**தரம் – *3B*, பொஸ்கோ**

# கிளி



கிளியே, கிளியே, அன்பின் கிளியே,
உன்னை அன்புடன் அழைக்கிறேன்.
தங்கக் கூட்டில் வாழும் கிளியே,
அன்பின் கிளியே வா! வா!

உன்னை அன்புடன் அழைக்கின்றேன்
கிளியே வா! வா!
அன்பின் வடிவத்தில் உள்ள
அன்புக் கிளியே பறந்து வா,

**ந.மதினுயா, தரம் - 6**
**யா/வேம்படி மகளிர் கல்லூரி**

# அறிவோமா

1. உலகில் மிகப்பெரிய அரண்மனை எது?.
   வத்திக்கான்
2. உலகில் மிகப்பெரிய கோபுரம் எது?.
   ஈபிள் கோபுரம்
3. இலங்கை ஜனாபதியின் வாசல்தலம் எது?.
   அலரிமாளிகை.
4. இந்தியா கிரிகற் முதல் கேப்டன் யார்?.
   சி.கே நாயுடு
5. விமானத்தை முதன் முதலில் ஓட்டியவர் யாவர்?.
   ரைட்சகோதரர்கள்

**ச.சுமேதினி, தரம் - *8***
**யா/நடேஸ்வரக் கல்லூரி.**

# கீதம் பாடுமே



வண்ண வண்ண பூக்களிலே
வண்டு வந்து மொய்க்குமே
எண்ணம் போல மது உண்டு
இனிய கீதம் பாடுமே.

சிவந்த சொண்டை நீட்டியே
சின்னக்கிளியும் கேட்குமே
உவந்து தந்த கனிகளை
உண்டு மழலை பேசுமே.

**த.கிருஷிகன், தரம் – 5A**
**யா/கோப்பாய் நாவலர்**
**தமிழ் வித்தியாலயம்**

# ஆசிரியர்

எந்தன் ஆசிரியர் அன்பானவர்.
ஏற்ற நல்ல கதைகள் சொல்லுவார்.
பாசத்துடன் பாட்டுகளும் சொல்லுவார்.
பாரில் என்றும் அவரை மறக்கேனே!

*ஜெ.அகிலன், தரம் - 3C,*
*யா/உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம்*

# அன்றாட வாழ்வில் பயன்படுத்தும் (Suggestion)

1. Let's go home - வீட்டுக்குப் போவோமா?.
2. Let's go out - வெளியே போவோமா?.
3. Let's sing a song - ஒரு பாடல் பாடுவோமா?.
4. Let's go to the playgroung
   - விளையாட்டு மைதானத்திற்கு போவேமா?.
5. Let's us go - நாங்கள் போவோமா?.
6. Let's us play - நாங்கள் விளையாடுவோமா?.

ஐ.தாருகா,
தரம் – 5B, பொஸ்கோ.

# எமதுணவு

பாகற்காய் வேணுமோ?
பச்சடிக்கு நல்லது.
புடலங்காய் வேணுமோ?
பொரியலுக்கு நல்லது!
தக்காளி வேணுமோ?
சாம்பாருக்கு நல்லது!
இத்தனையும் வாங்கினால்
இன்றே சமையல் பண்ணலாம்.
இன்பமாக உண்ணலாம்.

**த.தரணிதரன்**
**தரம் – *5B***
**பொஸ்கோ**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உனக்கு நீயே உண்மையாகிறாய்!!

அன்புள்ள நெஞ்சங்கள் அனாதைகள் அல்ல.
அவை இறைவன் விரும்பும் ஆலயங்கள்.
அரும்பெடுத்து இன்று மலர்தொடு.
அது நாளை உனக்கே மாலையாகும்.
உன்னை நீ உணர் – பின்.
உன்னால் பிறர் உணரப்படுவர்.
ஓயாது அலைகின்ற கடல் அலையை பார்!
கரையை அடையவே அது ஆற்றும் செயலையும் பார்.
உன்னால் முடியும் தளர்வுறாதே.
உன் முடிவுறா முயற்சி – என்றும் மறைவுறாதே.
ஆசைகளுக்கு ஒரு எல்லை வை!
ஆகாயம் போல் எல்லையற்றதாக
உன் அறிவை தை!
இறைவன் உனக்கு தந்தது
உன் வாழ்க்கை மாத்திரமே.
பிறர் வாழ்வதற்காக நீ வழிவிடுவாயானால்
உன் வாழ்வுக்கு இறைவன் தன்னையே தருவான்.
இறைவனால் உனக்கு தரப்படும்
– உண்மையான பரிசு வாழ்க்கையாகிறது.
– உண்மையான நேரம் மகிழ்ச்சியாகிறது.
– உண்மையான உணர்வு காதலாகிறது.
– உண்மையான மனிதன் நீயே ஆகிறாய்.

செல்வி.பா.நதீரா
தரம் – 11C
யா/வயாவிளான் ம.ம.வி.

# கிராமம்

எங்களூர்க் கிராமம்
எங்கும் இன்ப ராகம்
வானில் பறக்கும் கிளிகள்
கானம் நிறைக்கும் இனங்கள்
சேற்றில் வாழும் மனங்கள்

சோற்றை வழங்கும் கரங்கள்
இயற்கை வாழும் கோயில்
இன்னல் தாவும் வாயில்
உழைப்பே அங்கு பணியாகும்
சோம்பல் மக்களின் பிணியாகும்.

ஜெ.துசாயினி
தரம் – 4C, பொஸ்கோ

# கண்மணித் தாலாட்டு

ஆராரோ ஆரிவரோ ஆராரோ ஆரிவரோ
கண்மணியே ஆராரோ கண்மணியே ஆராரோ

கம்பனின் கவித்தமிழ் நீ
கலைஞனின் கலைத் தமிழ் நீ
(ஆராரோ ...)

பாரதி பண்தமிழ் நீ
வள்ளுவன் வண்தமிழ் நீ
(ஆராரோ ...)

இளங்கோவின் இன்தமிழ் நீ
இளம் கோவாய் திகழ்தமிழ் நீ
(ஆராரோ ...)

இசைகளில் தனித்தமிழ் நீ
கலைகளில் கவின்தமிழ் நீ
(ஆராரோ ...)

அம்மாவின் அன்புத்தமிழ் நீ
அப்பாவின் ஆசைத்தமிழ் நீ
(ஆராரோ ...)

திருமதி ந. உதயலதா,
ஆசிரியர், யா/சங்கானை சிவப்பிரகாச ம.வி.

# பாடல்

வண்ணக் கிளி போல் பறந்திட ஆசை
வானத்து நிலவாய் ஒளி தர ஆசை
கன்னல் தமிழைக் கற்றிட ஆசை
கடலில் மீனாய் நீந்திட ஆசை!

மலர்களைப் போல மணந்தர ஆசை
மலை மேல் மலை மேல் ஏறிட ஆசை
தளர்வோருக் கென்றும் உதவிட ஆசை
தாய்போல் அன்பாய் பொழிந்திட ஆசை!

கடமையை உணர்ந்து செயற்பட ஆசை
கடின உழைப்பால் வென்றிட ஆசை
மடமையைக் கொளுத்த மனந்தனில் ஆசை
மனிதனாய் வாழ்ந்து புகழ் பெற ஆசை!

ப.வான்மதி, தரம் - 5 யா/கோப்பாய்
சரவணபவானந்த வித்தியாலயம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உணவுகள் பற்றிய உண்மைகள்

- எமது மூளையின் ஆற்றலை முடுக்கிவிடும் உணவுகள் வாழைப்பழம், வல்லாரை, பேரீச்சம்பழம், உலர்ந்த திராட்சை, பிஞ்சு வெண்டைக்காய் என்பனவாகும்.
- இறைச்சியை விட வேர்க்கடலையில் புரதம் அதிகம்.
- பொன்னாங்காணியை துவரம் பருப்புடன் சேர்த்துச்சாப்பிட நாளடைவில் சதைப்பிடிப்பு ஏற்படும்.
- உடல் பலம் பெற பேரீச்சம்பழத்தைப் பாலில் போட்டு கொதிக்க வைத்து ஆறிய பின் உண்ண வேண்டும்.
- மலச்சிக்கலை நீக்கும் மூலிகைகள் உருளைக்கிழங்கு, வேர்க்கடலை, எள், ஆமணக்கு, கல்யாண முருங்கை, தக்காளி, பெருங்காயம், திராட்சை, வெந்தயம், பண்ணைக்கீரை என்பன.
- தினமும் சூரியகாந்தி விதைகள் 100 கிராமினை வறுத்துச் சாப்பிட்டு வந்தால் பற்களும் ஈறுகளும் உறுதியாகும்.
- குழந்தைகள் நன்கு படிக்க வாழைப்பழம் சிறந்த உணவாகும்.

- மேகதூதன்

# விடுகதைகள்

1. கைக்குள் ஏறும் காலுக்கள் ஏறாது அது என்ன?. காப்பு
2. ஒரு எழுத்து உதவும். அது என்ன?. கை
3. நெருப்புப்பட்டால் அழுவான் அவன் யார்?. மெழுகுவர்த்தி
4. விஷயம் தெரிஞ்சவன் வலிய வந்து சொல்ல மாட்டான். அவன் யார்?. புத்தகம்
5. அவனால் பிறருக்கு மதிப்பு. அவன் யார்?, ஆடை
6. அனைத்தையும் காட்டிக்கொடுப்பான் யாருக்கும் தீங்கு நினைக்க மாட்டான். அவன் யார்?. தொலைக்காட்சி
7. சிறந்த உடல்காரி. சேலைக்கு மேல் சேலை உடுத்தியிருப்பாள். அவள் யார்?. வெங்காயம்
8. ஒன்றை ஒன்று பார்க்காது. ஒன்றாய் எதையும் பார்க்கும். அது என்ன?. கண்கள்
9. களத்து மேட்டு நெல்லைக் காவல் காக்கும் விளக்கு. அது என்ன?. நிலா
10. காட்டில் மேட்டில் பாடுவான். கச்சேரியில் பாடமாட்டான். அவன் யார்?. வண்டு .

மு.கஜித்தா,
தரம் - 8 , யா/நடேஸ்வரக் கல்லூரி.


# அறிந்து கொள்வோம்!


1. இலங்கையில் முதல் முதலாக 1969 ஆம் ஆண்டு மின்சார சபை ஆரம்பிக்கப்பட்டது.
2. மனித உடலில் இருநூற்றி எட்டு (208) எலும்புகள் உள்ளன.
3. மனிதனால் பத்தாயிரம் (10 000) விதமான வாசனைகளை நுகர்ந்து அறிந்து கொள்ள முடியும்.
4. இலங்கையில் முதல் முதலாக 1962 ஆம் ஆண்டு எண்ணெய் கூட்டுத்தாபனம் ஆரம்பிக்கப்பட்டது.
5. இலங்கையில் மிக உஷ்ணமான பிரதேசம் அம்பாந்தோட்டை ஆகும்.
6. இலவசக் கல்வியின் தந்தை C.W.W கன்னங்கரா
7. இலங்கையில் முதல் முதலாக 1857 ஆம் ஆண்டு தபால்சேவை ஆரம்பிக்கப்பட்டது.
8. இலங்கையில் முதலாவது அரசியல் அமைப்பு 1833 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது.
9. போர்த்துக்கேயர் இலங்கையை 1505 ஆம் ஆண்டு கைப்பற்றினர்.
10. இலங்கையில் முதல் முதலாக 1975 ஆம் ஆண்டு கொழும்பு காஸ் கொம்பனி ஆரம்பிக்கப்பட்டது.
11. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் 1974 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது.

ஜி.குஹாஜினி,
தரம் 8C, யா/வேம்படி மகளிர் உயர்தரபாடசாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பறவைகள் பல விதம்...





☞வாத்துக்கள் அதிகாலையில் மட்டுமே முட்டையிடும்.

☞"அல்பட்ரா" என்னும் பறவை சிறகுகளை நீட்டி விரித்து வைத்துக்கொண்டு காற்றில் மிதந்தவாறே தூங்கும்.

☞பறவைகளில் வல்லூறு, ராஜாளி போன்றவை மணிக்கு 100 கி.மீ முதல் 120 கி.மீ வேகத்தில் பறக்கும்.

☞வட கடல் பகுதியில் வாழும் "சிவப்பு மார்பு டைவர்" என்ற பறவை குழந்தை போல அழும்.

☞கண்கள் இருந்தும் பார்வை இல்லாத உயிரினம் வெளவால் ஆகும்.

☞அவுஸ்திரேலியாவில் வாழும் "தவளை வாயன்" என்ற பறவை கும்பகர்ணன் மாதிரி இருக்கும். இதைக் கையில் எடுத்து வைத்துக்கொண்டாலும் இதன் தூக்கம் கலையாது.


☞ஆண் - பெண் ஜோடி பெங்குவின் பறவைகள் ஒரு வருடம் வரை பிரிந்து இருந்தாலும் மறுபடி பார்க்கும் போது தமது ஜோடியை அடையாளம் கண்டு விடும். இதற்கு முக்கிய காரணம் இவை எழுப்பும் முக்கிய ஒலிதான்.


☞உலகில் மிக உயரமான பறவை தீக்கோழி ஆகும்.

**ஜெ.யாழினி,**
**தரம் 6A, யா/இந்து மகளிர் கல்லூரி.**

# வியத்தகு அங்கிகள்







1. உலகின் மிகப்பெரிய உயிரி - ரெட்வூட் (Red wood)
2. உலகின் மிகப்பெரிய மலர் - ரஃப்லேசியா (Raffesia)
3. கெண்டித் தாவரம் - நெப்பந்தசு
4. மாயக் கண்ணீர் விடும் தாவரம் - துரோசீரா (Drosera)
5. மிகப்பெரிய இலை கொண்ட தாவரம் - இராட்சத நீர் அல்லி (Giant water lily)
6. உலகின் மிகப் பெரிய விலங்கு - நீலத் திமிங்கிலம் (Blue Wale)
7. தரையில் வாழும் மிகப்பெரிய விலங்கு - ஆபிரிக்க யானை (Elephant)
8. உலகின் மிக நீண்ட பாம்பு - அனகொண்டா (Anaconda)
9. உலகின் மிகச் சிறிய பறவை - ஹம்மிங் பறவை (Bee humming Breird)
10. முட்டையிடும் முலையூட்டி - தாரா அலகு பிளாற்றிப்பஸ் (Duck bilied Platy pus)
11. கம்பளி யானை - மமொத்து (Wooly mammoth)
12. குட்டையான வால் கொண்ட விலங்கு - ரேபியர் (Tapier)
13. நேரிய கொம்பு கொண்ட விலங்கு - ஒரிசஸ் (Oryxyx)


திருமதி ஜ.பாஸ்கரன்,
யா/நடேஸ்வரக் கல்லூரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# படங்களுக்கு வர்ணம் தீட்டுவோம்



க.ராமரூபன்,
தரம் 8, கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்.



அ.நிரோஜினி,
தரம் 11, நடேஸ்வராக் கல்லூரி



சே.புஸ்பதீபன்,
தரம் 8, நடேஸ்வராக் கல்லூரி



சுதர்சன்,
தரம் 8, நடேஸ்வராக் கல்லூரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்திப்போமா?

அபாயம் இல்லாமல் அபாயத்தைத் தாண்ட இயலாது.
**- லத்தீன் பழமொழி**

எந்த மாபெரும் காரியத்தைப் புரிவதற்கும் அளவு கடந்த ஆர்வ எழுச்சி தேவை.
**- சேகுவரா**

தனக்குக் கிடைக்கும் ஊதியத்தின் மதிப்பைக் காட்டிலும், தன்னுடைய உழைப்பின் மூலமாக மதிப்பை உயர்த்திக் காட்டும் மனிதனே சமுதாயத்தில் உயரமுடியும்.
**- ஆபிரகாம் லிங்கன்**

சிறு சிறு தியாகங்களின் தொகுப்பே நல்ல நடத்தைகள்.
**- எமர்சன்**

எதிர்காலத்தைப் பற்றி அக்கறை கொள்ளாதவன் விரைவில் துன்பத்தைச் சந்திப்பான்.
**- கொன்பியூசியஸ்**

பிரியமான வேலை யாவும் கஷ்டமானதல்ல.
**- ஹென்றிபோர்டு**

தான் விரும்புவதைச் செய்வதில் மகிழ்ச்சி இல்லை. தான் எதைச் செய்ய வேண்டுமோ அதை விரும்புவதில் தான் இருக்கிறது.
**- பாரி**

எல்லோருடனும் மரியாதையாகப் பழகு. ஆனால் சிலருடன் மட்டும் நெருக்கமாகப் பழகு. அவர்களையும் பழகுவதற்கு முன் நன்றாகச் சோதி.
**- வாசிங்டன்**

இலட்சியங்களே உலகின் எஜமானர்கள்.
**- ஹோலந்து**

வீரச்செயல்களின் நறுமணமே புகழ்.
**- சோக்கிரட்டீஸ்**

**'இளவேனிலான்'**

# சாதனையாளர் சரித்திரத்தில் ................

## மார்க்கோனியின் மகத்துவம்

- பிறக்கும் போது செல்வர் - மறையும் போதும் செல்வர்.
- உலகப்புகழ் பெற்ற மேதை.
- இத்தாலியின் 'பொருலொனா' எனும் இடத்தில் 25.04.1874 இல் பிறந்தார்.
- அம்மாவின் செல்லப்பிள்ளை. இளமையிலேயே புதிய பொட்களை செய்வதில் தீராத ஆசை கொண்டவர். மின்சாரக்கம்பிகளை குறுக்கும் நெடுக்குமாகத் தன் அறைக்குள் கட்டினார். ஆராய்ச்சி செய்தார்.
- ஜெர்மனி நாட்டைச் சேர்ந்தவர் ஹெர்ட்ஸ். இவர் கம்பியில்லாமல் ஒலிகளை வாயு மண்டலத்தில் சைகைகளாகக் காற்றில் செலுத்த முடியும் என்று தெரிவித்தார். எனினும் இப்பரிசோதனைகளில் வெற்றி பெறுமுன்னரே ஹெர்ட்ஸ் இறந்துவிட்டார். இவரது சிந்தனைகளைப் பின்பற்றியே மார்க்கோணி ஆய்வுகளை மேற்கொண்டார்.
- தனது 21 ஆவது வயதில் (1895 ஆம் ஆண்டு) 12 மீற்றர் தூரத்திலிருந்த மின்சார மணியை திருகாணி ஒன்றினை திருகுவதன் மூலம் ஒலிக்கச் செய்து பெற்றோரை வியக்க வைத்தார்.
- 1896 ஆம் ஆண்டு 2 கிலோமீற்றர் தூரத்திற்கு மட்டும் கம்பி இல்லாத் தந்தி மூலம் செய்திகளை அனுப்பினார். 1910 ஆம் ஆண்டு 10 000 கிலோ மிற்றர் தூரத்திற்கு செய்திகளை காற்றின் வழியே அனுப்பினார். பெரும் வெறியினை 23 ஆவது வயதில் பெற்றார்.
- தாய் மீது கொண்ட அன்பில் நெகிழ்ந்து போய் நீண்ட காலம் திருமணம் செய்யாது இருந்தார்.
- தனது 53 ஆவது வயதிலே 23 வயது நிரம்பிய ஒரு பெண்ணை காதல் மணம் புரிந்தார்.
- அவரிடம் 220 அடி நீளமான படகு ஒன்று இருந்தது. அதன் பெயர் எலக்ரா (Electra). அதுவே அவருக்கு ஆராய்ச்சிக் கூடமாகவும் வீடாகவும் விளங்கியது.
- 1930 இல் 'எலக்ரா' படகிலேயே ஒரு பெண்குழந்தைக்கு தந்தையானார். அக்குழந்தைக்கும் 'எலக்ரா' என்று பெயர் வைத்தார்.
- மார்க்கோணி எப்போதும் சுத்தமான உடையுடன் காட்சி தருவார். அவரது சிந்தனை எப்போதும் கம்பியில்லாத் தந்தி பற்றித்தான் இருக்கும். இன்றைய இலத்திரனியல் தோன்றி வளர்ந்திருப்பதற்கும் முன்னோடியாகத் திகழ்ந்து நோபல் பரிசு பெற்றவர் மார்க்கோணி ஆவார்.

**கண்மணியில் வெளியாகும் ஆக்கங்களிற்கு அவற்றை எழுதியவர்களே பொறுப்பாவர்.**
**- ஆசிரியர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org